# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

# 2015/06

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபம்

**காலம்** :- 08.12.2015 (செவ்வாய்க் கிழமை) காலை 09.30 மணி

**சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா (தலைவர்)
- கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா.
- திரு.இ.ஆனல்ட் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.பா.கஜதீபன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.இ.இந்திரராசா – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.சி.அகிலதாஸ் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.

**சமுகமளித்த ஏனையோர்**

- திரு.கே.சிவநேசன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.அ.பரஞ்சோதி – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.கே.என்.கனகரத்தினம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.எம்.பி.நடராஜ் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.க.தருமலிங்கம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.க.வ.கமலேஸ்வரன்– கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.வே.சிவயோகன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ச.சுகிர்தன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ப.அரியரத்தினம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.சு.பசுபதிப்பிள்ளை – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.தர்மபால – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ஆ.சி.து.ரவிகரன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.கே.சயந்தன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.வை.தவநாதன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.இ.இரவீந்திரன் – செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.எஸ்.விகிர்தன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.

- திருமதி.பா.அபிராமி – உதவிச்செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.தி.ஞானசுந்தரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு
- திருமதி.எஸ்.வனஜா – பிரதிப் பணிப்பாளர்,கலாசார திணைக்களம், வட மாகாணம்.
- செல்வி ரி.ரவிகரன் – மா.கல்வி அமைச்சு.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் ஐந்தாவது கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று இனிவரும் காலங்களில் தீர்மானிக்கப்பட்ட திகதியிலேயே கூட்டத்தை கூட்டுவது எனவும் கூட்டத்திற்கு சமுகமளிக்க முடியாத கௌரவ உறுப்பினர்கள் தமது ஆலோசனைகள் , கோரிக்கைகளை மற்றைய கௌரவ உறுப்பினர்களூடாக முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டு கூட்டத்தை ஆரம்பித்தார்.

## 2016 ஆம் ஆண்டிற்குரிய மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி (PSDG)

350 மில்லியன் ரூபாவிற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், தற்போது 969 மில்லியன் ரூபா PSDG இற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 465 மில்லியன் ரூபா TSEP இற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 1465 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மீண்டுவரும் செலவீனத்தில் கல்வி அமைச்சிற்கு 240.12 மில்லியன் ரூபாயும் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு 9002.502 மில்லியன் ரூபாயும் விளையாட்டுத் திணைக்களத்திற்கு 55.00 மில்லியன் ரூபாயுமாக மொத்தமாக 9297.622 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மூலதன செலவீனமாக கல்வி அமைச்சிற்கு 10.00 மில்லியன் ரூபாயும் மாகாண கல்வித்திணைக்களத்திற்கு 1438.50 மில்லியன் ரூபாயும் விளையாட்டுத் திணைக்களத்திற்கு 24.00மில்லியன் ரூபாயும் கலாசாரத் திணைக்களத்திற்கு 9.00 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- குறித்தொதுக்கப்பட்ட நிதியினை 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி வேலைத்திட்டங்களிற்கு பகிர்ந்தளிக்க மாவட்ட ரீதியாக குறித்தொதுக்குவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரமில்லையெனவும் நிதியினை பகிர்ந்தளிக்க மாகாண சபைக்கே அதிகாரம் உள்ளதாக கௌரவ எதிக்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.
- நிதியினை குறித்தொதுக்குவதற்கு போரின் தாக்கங்களை உணர்ந்த எம்மாலேயே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதுடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி அதன் உரிமை எமக்குள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் கலாநிதி திரு.க.சர்வேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.
- கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்கள் போரினால் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட பகுதியாதலால் அப் பகுதிகளிற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களும் கௌரவ உறுப்பினர் திரு.கே.சிவநேசன் அவர்களும் கேட்டுக்கொண்டனர்.

- ஆசிரியர் பயிற்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 80 மில்லியன் ரூபாய் நிதியினை ஆசிரியர் வளத்திற்கு அதாவது தளபாட வசதி , கணணி வசதி உட்பட ஏனைய வசதிகளை மேற்கொள்ள ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.
- யா/ஒஸ்மானியா கல்லூரி, யா/கஜீதா பாடசாலைகளில் தளபாடங்கள் பற்றாக்குயைாக உள்ளன – கௌரவ உறுப்பினர் ஜனாப் அஸ்மின் அவர்கள் சார்பாக கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட் குறிப்பிட்டார்.
- மாகாணத்திற்கு என்று ஓர் வெளியீட்டுத் திணைக்களம் அல்லது அதிகார சபை உருவாக்கப்பட வேண்டும் என கௌரவ உறுப்பினர் திரு கே.சயந்தன் அவர்கள் கேட்டுக்கொண்டார். வடக்கு கிழக்கு பிரிவதற்கு முன்னர் இந்நிறுவனங்கள் இயங்கி வந்ததாகவும் தொடர் நட்டமடைந்ததால் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.
- மின்சாரம் , குடிநீர் இல்லாத பாடசாலைகளிற்கு உடனடியாக வசதிகள் செய்யப்பட வேண்டும் – கௌரவ உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்.
  பாடசாலைகளில் மலசல கூடங்கள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை என்பதனால் கூடிய கவனமெடுக்கப்படல் வேண்டும் – கௌரவ எதிக்கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா
  90 பாடசாலைகளின் மலசலகூட பராமரிப்பு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.
- குறை நிலையிலுள்ள கட்டடங்கள் கீழ் தளம் மட்டும் முடிக்கப்பட்ட மாடிக்கட்டடங்கள் முடிக்கப்பட வேண்டும் – கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட்
  வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் குறை நிலையிலுள்ள கட்டடங்களை முடிப்பதற்கு 600 மில்லியன் ரூபா தேவைப்படும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.
- வலய ரீதியாக பாடசாலைகளின் தரம் அடிப்படையில் மாகாண சபை உறுப்பினர்கள் , செயலாளர் , மாகாண கல்விப் பணிப்பாளர், அதிபர் , ஆசிரியர் , பெற்றோர் உள்ளடங்கிய கூட்டங்களை நடாத்தி விடயங்களை ஆராய்தல் சிறப்பானதாக இருக்கும் – கௌரவ உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்.
  12 வலயங்களிலும் சனவரி,பெப்ரவரி மாதங்களில் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- முல்லைத்தீவு மாவட்டத்தில் திருத்த வேலைகள் குறையாக உள்ள பாடசாலைகளான உடுப்புக்குளம் அ.த.க பாடசாலை , இரணைப்பாலை றோ.க.த.க.ம.வித்தி , முறிப்பு அ.த.க.பா , பாரதி வித்தியாலயம் என்பன கடந்த கால கூட்டங்களில் வழங்கப்பட்ட அனுதிக்கமைய உள்வாங்கப்பட வேண்டும் என கௌரவ உறுப்பினர் திரு.ஆ.சி.து.ரவிகரன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- கடந்த வருடத்தில் அனுமதி மே மாதமே கிடைத்தது எனவும் இவ் வருடம் சனவரி மாதமே அனுமதியைப் பெற முயற்சிக்க வேண்டும் எனவும் விரைவில் கிடைக்கப்பெற்றால் வேலைத்

திட்டங்களை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் எனவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் தயாரிக்கப்படும் அறிக்கை கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் பார்வைக்கு 18.12.2015 அன்று சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கௌரவ அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

## M-Learning

அமைச்சினுள் ஆய்வு கூடம் ஒன்று உருவாக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் வீட்டிலிருந்தவாறு இரவு 8.00 – 10.00 மணி வரை நடைபெறும் வகுப்புகளில் தமது கணனி மூலம் கலந்து கொண்டு கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. மாணவர்களிற்கு தனித் தனியே இரகசிய இலக்கம் வழங்கப்படும் வரவுப் பதிவும் மேற்கொள்ளப்படும்.

கணனி வசதி இல்லாத மணவர்கள் M-Learning முறையில் கல்வி பயில்வது சாத்தியமற்றது என கௌரவ உறுப்பினர் கலாநிதி திரு.க.சர்வேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.

மாணவர்களிடம் தகவல் திரட்டப்படவுள்ளது. கணனி இல்லாத மாணவர்களிற்கு ஏற்ற வசதிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

### விளையாட்டு தொடர்பானது

- தேசிய மட்டத்தில் 07 பதக்கங்கள் எமது மாகாணத்தைச் சேர்ந்த வீரர்களால் வெல்லப்பட்டுள்ளன. இதில் கால்பந்தாட்டப் போட்டியில் வெண்கல பதக்கமும் கபடிப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் பளு தூக்குதல் போட்டியில் வெள்ளி, வெண்கல பதக்கங்களும் குத்துச் சண்டைப் போட்டியில் வெண்கலப்பதக்கங்களுமாக 07 பதக்கங்கள் வெற்றியீட்டப்பட்டுள்ளன.
- Colours Night வருட இறுதிக்கு முதல் வைப்பது சிறந்தது என்பதனால் திகதியை நிர்ணயிக்குமாறு கேட்டுக் கொண்டார்.
- வவுனியாவில் விளையாட்டு உத்தியோகத்தர்கள் , பயிற்றுநர்கள் , விளையாட்டு வீரர்கள் உள்ளடங்கலாக 12,13.12.2015 பயிற்சி முகாம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

  பயிற்சியாளர்கள் பதவி உயர்த்தப்படல் தொடர்பிலும் 05 மாவட்டங்களிலும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் புதிய விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

- விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பில் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் பரீட்சை 19.12.2015 இல் நடாத்தப்படவுள்ளது.
- சகல மாவட்ட விளையாட்டு உத்தியோத்தர்களிற்கும் வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
- உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதிற்குட்பட்ட பிரிவில் முதலாமிடம் பெற்ற வட மாகாண அணி இந்தியாவில் திருச்சியில் உள்ள 03 அணிகளுடன் போட்டியிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதனால் 01 மில்லியன் ரூபாய் தேவைப்படும் எனவே உரிய வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
  இவ்விடயம் தொடர்பில் பிரதம செயலாளருக்கு கோரிக்கை விடப்பட்டதாகவும் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் தற்போது தாம் மீண்டும் கோரிக்கை அனுப்பியுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார். மாகாண சபை நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்களை பெற்று கொடுப்பதற்கும் இந்தியா செல்வதற்கான நிதியினை வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.
- வலைப்பந்தாட்ட சங்கத்தின் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
- 05 மாவட்டங்களிலும் நடைபெறும் மெய்வல்லுநர் சங்கத்தின் கூட்டங்களில் சம்பந்தப்படாதவர்கள், நிர்வாகத்தில் இடம்பெறாதவர்களின் தலையீடு அதிகமாக காணப்படுவதால் வீரர்கள் , உறுப்பினர்களிற்கு தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதனால் உடன் இப்பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.ஆனல்ட் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
- வல்வெட்டித்துறையில் ஆழிக்குமரன் நினைவாக நீச்சல்தடாகம் அமைப்பது தொடர்பில் கருத்துரைத்த கௌரவ உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறையில் 25 தொடக்கம் 30 ஏக்கர் வரையிலான காணி இருப்பதாகவும் கௌரவ அமைச்சர் மங்கள சமரவீர அவர்களும் திருமதி ஆழிக்குமரன் அவர்களும் நிதி வழங்க தயாராயிருப்பதாகவும் தெரிவித்தார்.
  காணி சம்பந்தமாக பிரதேச செயலாளரிடம் விபரம் கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- சாவகச்சேரியில் உள்ளக விளையாட்டு மைதானம் அமைக்குமாறு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இ.சரவணபவான் அவர்களின் கோரிக்கை தொடர்பில் –
  பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு கௌரவ மாகான சபை உறுப்பினர்கள் பலர் விருப்பமின்மையை வெளிப்படுத்தியதுடன் அங்கு பழைமையை காப்பது அவசியம் என வெளிப்படுத்தினர். தற்போதும் 02 கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன என்றும் வெளிப்படுத்தினர்.

## அண்மையிலுள்ள பாடசாலைகள் தரமுயர்த்தல் திட்டம்

அத்திட்டம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் விபரம் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. தெரிவில் கீழ்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண வலயத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் யாழ் இந்து மகளிர் பாடசாலைக்கு பதிலாக யா/கோண்டாவில் இராமகிருஷ்ண பாடசாலையும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யா/யாழ் மத்திய கல்லூரிக்கு பதிலாக யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது.

வலிகாமம் வலயத்தில் யா/அருணோதயா கல்லூரிக்கு பதிலாக யா/அருணோதயா ஆரம்பப் பாடசாலையும் யா/ஸ்கந்தவரோதயா பாடசாலைக்கு பதிலாக யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டன.

வடமராட்சி வலயத்தில் யா/வடமராட்சி மெதடிஸ்ட் பாடசாலையும் யா/தேவரையாளி இந்து வித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டது.

தீவக வலயத்தில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் யா/யாழ்ற்ரன் கல்லூரிக்குப் பதிலாக யா/காரைநகர் இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி வலயத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு பதிலாக பாரதி வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது.

முல்லைத்தீவு வலயத்தில் மு/குமுழமுனை மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் வலயத்தில் மன்/சென் சேவியர் பாடசாலைக்குப் பதிலாக மன்/பற்றிமா மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது.

மடு வலயத்தில் மன்/பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலை தெரிவு செய்யப்பட்டது.

வவுனியா வடக்கு வலயத்தில் வ/கனகராயன்குளம் மத்திய கல்லூரிக்குப் பதிலாக வ/புளியங்குளம் இந்து வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது.

வவுனியா தெற்கு வலயத்தில் வ/நெளுக்குளம் கலைமகள் ஆரம்ப பாடசாலை தெரிவு செய்யப்பட்டது.

### பாடசாலை தரமுயர்த்தல்

1. மு/தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை தரம் 10 ஆரம்பித்தல் – அறிக்கை கோரப்பட்டுள்ளது.

**மீள ஆரம்பித்தல்**

1. வ/ஓமந்தை மத்திய கல்லூரி தரம் 01 இருந்து தரம் 05 வரை ஆரம்பித்தல் – அனுமதி வழங்கப்பட்டது.
2. யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 01 சமாந்தர வகுப்புகள் இரண்டிற்கு அனுமதித்தல் – நிராகரிக்கப்பட்டது.
3. யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் தரம் 01 மீள ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு பா.கஜதீபன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கமைய அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**பிற விடயங்கள்**

- பாடசாலைகளுக்கு அருகிலுள்ள மாணவர்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை என்றும் புள்ளித் திட்டமிடலில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா கௌரவ மாகாண சபை உறுப்பினர்களான திரு.ச.சுகிர்தன், திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.
- பாடசாலைகளில் ஒரு வகுப்பிலும் மேலதிக சமாந்தர வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கக் கூடாது என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.க.தருமலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## 18.10.2015 ஆந் திகதிய அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்

➢ **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

இடமாற்றப்பட்டியல் தயாரிக்கப்பட்டு இடமாற்ற சபையில் தீர்மானித்தபடி கௌரவ அமைச்சர் அவர்களின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டிற்குரிய இடமாற்றப் பட்டியல் செயலாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தரம் 01 ஐச் சேர்ந்த 09 அதிபர்களுக்கான இடமாற்றம் கல்வி அமைச்சினாலும் தரம் II , தரம் III வகுப்புகளைச் சேர்ந்த 124 அதிபர்களது இடமாற்றம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

- திரு முருகானந்தம் அவர்களுடைய இடமாற்றம் தொடர்பில் கௌரவ உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் அவர்களின் கோரிக்கைக்கமைய நியமனம் தொடர்பில் மீள ஆராய்வதாக செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.
- செட்டிக்குளம் அதிபர் இடமாற்றம் தொடர்பில் கௌரவ திரு.இ.இந்திரராசா அவர்கள் கோரிக்கைக்கமைய நியமனம் தொடர்பில் மீள ஆராய்வதாக செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.
- க.பொ.த. சாதாரணத்திலுள்ள பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றிய அதிபர்களை தரம் 08 , தரம் 05 வரையுள்ள பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்யும் போது அவர்கள் மனதளவில் பாதிக்கப்படுவதாக கௌரவ உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் தெரிவித்தார்.
- கிளி/புனித திரேசா வித்தியாலயத்தின் புதிய பிரதிஅதிபர் இடமாற்றம் தொடர்பில் மீள ஆராயுமாறு கௌரவ உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் தெரிவித்தார்.

- **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

அமைச்சின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 04 குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு வலயங்களாக பாடசாலைகள் தரிசிப்பின் மூலம் தொண்டராசிரியர்கள் தகவல்கள் திரட்டப்பட்டு இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஒப்பந்த ஆசிரியர்கள் 40 வயதிற்கு மேற்பட்டோரும் கடமையாற்றுவதனால் விசேடமாக வயதுக் கட்டுப்பாட்டினை நீக்கக் கோரி கபினட் குழுவிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- பாடசாலைகளில் விடுமுறை ஆரம்பித்துள்ளதனால் சனவரி 2016 இல் அறிக்கை சமர்ப்பிக்க முடியும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்) திரு மா.தேவேந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- வடமராட்சி வலயத்தில் தொண்டராசிரியராக கடமையாற்றிய 07 ஆசிரியர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நியமனம் தொடர்பிலும் கௌரவ உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் அவர்கள் கோரிக்கை விடுத்தார்.
  தொண்டராசிரியர் பட்டடியலில் அவர்களுடைய பெயர் உள்ளடங்கியிருந்தால் அவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

டிசம்பர் முதலாம் திகதி வழக்கிற்கு இரு சாராரும் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காமையினால் வழக்கு நிலுவையில் உள்ளது. அடுத்த வழக்குத் தவணையான 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதியில் வழக்கினை மீளப் பெறுவதாக தெரிவித்துள்ளார். வழக்கு நிலுவையிலுள்ளதால் புதிய அதிபர் நியமனத்திற்கு கோரிக்கை வைப்பது நீதிமன்றை அவமதிப்பதாக அமையும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார். புதிய அதிபர் நியமிப்பது தொடர்பில் மாகாண சபையினுடாக கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதற்கமைய புதிய அதிபர் நியமனத்திற்கு நீதிமன்ற அனுமதியை கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

பாடசாலையை செந்தக் காணியில் நடைபெற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் காணியினுள் இடம்பெயர்ந்தோர் குடியிருப்பதனால் இவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரி மீள்குடியமர்வு அமைச்சிற்கும் பிரதேச செயலருக்கும் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

- சமளங்குளம் – ஒட்டுசுட்டான் , விசுவமடு பகுதி மாணவர்களிற்கு பாடசாலை செல்வதற்கு பேருந்து வசதியின்மை தொடர்பில் அரச அதிபர் உரிய ஒழுங்குள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.
- நெடுந்தீவு பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை பாரிய குறைபாடாக உள்ளமை தொடர்பில் இடமாற்றத்தின் போது ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
- எழுவைதீவில் நடைபெற்ற நடமாடும் சேவையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையான எழுவைதீவு, அனலைதீவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பாரிய குறைபாடு தொடர்பில் இடமாற்றத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வ/பூந்தோட்டம் மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு கௌரவ உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

- **பாடசாலை தரமுயர்த்துதல்**

1. வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் , விஞ்ஞானப் பிரிவு ஆரம்பித்தல் – அறிக்கை கோரப்பட்டுள்ளது.
2. மன்/கொண்டச்சி அ.மு.க. பாடசாலையில் க.பொ.த. (கலைப்பிரிவு , வர்த்தக பிரிவு) ஆரம்பித்தல் – மாணவர் தொகை தொடர்பாக அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
3. வ/பரக்கும் மகா வித்தியாலயத்தில் தரம் 01 ஆரம்பித்தல் – அனுமதிக்கப்படுகின்றது.

    - மேற்படி பாடசாலை தரம் 01 ஆரம்பித்தல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு தர்பால அவர்கள் தரம் 01 ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டால் அயலிலுள்ள 03 பாடசாலைகளில் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்படும் எனவும் இவ் விடயம் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து முடிவு எட்டும்படியும் தெரிவித்தார்.
    - அயலிலுள்ள 03 பாடசாலைகள் பாதிக்கப்படும் என்றால் ஆழமாக ஆராய்ந்து முடிவை எட்டுமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு க.சர்வேஸ்வரன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
    - ஈரற்பெரியகுளத்தில் 200 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மாணவர்கள் தொகையை கருத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.
    - இவ்விடயம் தொடர்பில் கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக அவர்களுடன் கலந்துரையாடி முடிவு எட்டப்படும் என கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலைகளிற்கு தரம் 01 அனுமதி வழங்கப்பட்டததை தொடர்ந்து சில பாடசாலைகள் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை மாணவர்களை இணைப்பதற்கு விண்ணப்பங்கள் கோருவதனால் அயல் பாடசாலைகள் பாதிப்படைவதாகவும் கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பில் , பாடசாலைகள் தரம் 01 இற்கு மட்டுமே விண்ணப்பங்களை கோர முடியும் எனவும் தரம் 05 வரை ஆரம்பித்தால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் எனவும் உடனடியாக ஆசிரியர்களை நியமிப்பது கடினம் எனவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

மாணவர் தொகையினை கருத்திற் கொண்டு தரம்01 தொடக்கம் தரம் 05 வரை விண்ணப்பங்களை கோர முடியும் என கௌரவ அமைச்சர் தெரிவித்தார்

- **புதிய பாடசாலை ஆரம்பித்தல்**

  - மன்னார் கணேசபுரம் இந்திய வீட்டுத் திட்டம் பகுதியில் ஆரம்பப்பிரிவு ஆரம்பித்தல் – புதிய பாடசாலைகள் உருவாக்கப்படும் போது ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் எனவும் ஆளணி உருவாக்க்பட வேண்டும் எனவும் 1000 பாடசாலைகள் திட்டத்தில் உருவாக்கப்பட்ட ஆரம்ப பாடசாலைகளுக்கான ஆளணி உருவாக்கம் இன்னமும் முற்றுப் பெறவில்லை எனவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

    பலதரப்பட்ட தரப்பினரின் கோரிக்கையாக இருப்பதனால் அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

    உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

    உரிய அறிக்கைகளை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

  - யா/வண்ணார்பண்ணை முஸ்லிம் பாடசாலை மீள ஆரம்பித்தல் – அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

  - புங்குடுதீவு, ஊரதீவு பிரதேசத்திலுள்ள யா/திருநாவுக்கரசு வித்தியாலயம் மீள ஆரம்பித்தல் – அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- **பாடசாலை பெயர் மாற்றம் தொடர்பாக**
  - யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பெயர் மாற்றம் – கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
  - யா/தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் தொடர்பில், எம்மால் சகல தரப்பினரையும் உள்ளடக்கி கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட எல்லோருமே பெயர் மாற்றத்திற்கு ஆதரவாகவே கருத்துத் தெரிவித்தனர் எனவும் எதிராக எவரும் கருத்து தெரிவிக்கவில்லை என மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

    கடந்த 10 வருடங்களிற்கு முன்னரே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு. எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

    பாடசாலையை சார்ந்தோர் பெயர் மற்றம் சம்பந்தமாக சாதகமாக கருத்து தெரிவிப்பதனால் சாதகமாக பரிசீலிக்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.கே.என.கனகரத்தினம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

    பெயர் மாற்றம் தொடர்பில் அனுமதி வழங்கப்படுகின்றது.
  - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் யா/சங்கானை இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் – மாணவர் தொகை குறைவாக இருப்பதனால் 1000 மாணவர்களாக எண்ணிக்கை உயர்வடைந்தவுடன் ஆராய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- தனி ஒரு ஆசிரியரே கடமையாற்றும் பாடசாலைக்கு மேலதிக ஆசிரியர்களை நியமித்தல்–
  - மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலை – துணுக்காய் வலயம்
  - பெரிய மடு அம்பாள் வித்தியாலயம்
  - மு/ஒதியமலை அ.த.க. பாடசாலை – துணுக்காய் வலயம்
  - கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலை

  கல்வியியற் கல்லூரி ஆசிரியர் நியமனத்தின் போது நியமிக்கப்படுவர்.

**கட்டடம் அமைத்தல்**

யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் பழைமையான கட்டடம் ஒன்றை மாற்றி புதிய கட்டடம் அமைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பழைய கட்டடத்தின் முகப்பினை அப்படியே வைத்துக் கொண்டு புதிய மண்டபம் அமைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. பழைய கட்டடத்தை அழிக்க வேண்டாம் என அதிபருக்கு அறிவித்தல்.

**கலாசாரம் தொடர்பானது**

- **பண்டாரவன்னியன் சிலை அமைப்பது தொடர்பாக**

  வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதியின் மத்தியில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் வீதியின் அருகில் அமைப்பதாக இருந்தால் அனுமதி வழங்கப்படும் எனவும் வாய்மொழி மூலமாக அறிவித்துள்ளனர்.

  வீதியின் மத்தியில் போதியளவு இடவசதி இருப்பதாக கௌரவ மாகாண சபை உறுப்பினர் கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் அவர்கள் தெரிவித்தார்.

  முதலில் பண்டாரவன்னியனுடைய சிலையை முதலில் செய்து வைத்திருப்பது சிறந்தது என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு. எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

  மாகாண சபையினூடாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எழுத்து மூலமான முடிவைக் கோருவது என முடிவு செய்யப்பட்டது.

- **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**

  நவம்பர் மாதம் வரை 80% ஆன வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன எனவும் வருட இறுதிக்குள் 95-98% ஆன வேலைகள் நிறைவடையும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- **பட்டதாரி ஆசிரியர் நியமனம்**

  மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை 30.12.2015 இல் நடாத்தப்படவுள்ளது.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**

  வட மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் மாகாண முதலமைச்சர், செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் சகல ஆசிரியர்களும் வட மேல் மாகாண சபையுடன் இணையத் தயாராயுள்ளதுடன் ஆசிரியர்களை மட்டும் விடுவிப்பதனால் எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருக்கும் எனவே பாடசாலைகளையும் வடமேல் மாகாண சபையுடன் இணைக்க வேண்டும் என செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

**வேறு விடயங்கள்**

- வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள, மாணவர் தொகை குறைந்த பாடசலைகளை ஒன்றிணைத்தல் – 10 பாடசாலைகளில் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளிலும் கூட்டங்கள் நடாத்தப்பட்டதும் முடிவு எட்டப்படும்.
    - மீள் குடியேற்றப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் வளங்கள் போதியளவில் கிடைக்காமையினால் மாணவர்கள் வெளியேற்றம் இடம்பெற்று பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே வளங்களை பாடசாலைகளுக்கு ஒதுக்குவதன் மூலம் இந்நிலையை குறைக்க முடியும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.இந்திரராசா அவர்கள் கேட்டுக் கொண்டார்.
- முல்லைத்தீவு R.C. பாடசாலையை பெண்கள் பாடசாலையாக மாற்றுதல் – கூட்டம் நடாத்தப்பட்டு முடிவு எட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
- மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம் மகிந்தோதய ஆய்வு கூடம் 01.12.2015 இல் திறந்து வைக்கப்பட்டது. உடையார்கட்டு மகா வித்தியாலயம், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மகிந்தோதய ஆய்வு கூடம் என்பன உடன் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- அச்சுவேலி பாடசாலை காணியை உரியோரிடம் கையளிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு, இசுறுபாயவுக்கு ஏழுத்து மூலம் அறிவித்தல்.
- யாழ் மத்தியிலுள்ள OLR பாடசாலைக்கு அருகிலுள்ள இராணுவ முகாமில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் உள்ளதாகவும் அதனால் பாடசாலைக்கு பாரிய பாதிப்பு தொடர்பில் இராணுவ அதிகாரிக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவித்தல்.

  OLR விளையாட்டு மைதான காணி இராணுவத்திடம் சட்டபூர்வமாக கையளிக்கப்படாமையினால் அக்காணியை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் வழக்கு தொடரப்படல் வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

  பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டால் தாம் காணியை விட்டு வெளியேற தயாராயிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்ததாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.
- மு/வெட்டு வாய்க்கால் பாடசாலை வளாகத்தினுள் இராணுவ முகாம் கட்டடம் தொடர்பில் ஆராயப்பட்டு பிரதேச செயலருடன் கலந்துரையாடப்பட்டதுடன் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டும் உரிய பதிலை பெற முடியவில்லை எனத் தெரிவித்தார்.
- யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான முரண்பாடு தொடர்பில் இரண்டு ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட இருக்கின்றனர் பாடசாலை அதிபர் வருடாந்த இடமாற்றத்தில் இடமாற்றம் செய்யப்படுவார்.

- வ/பெரிய கோமரசன்குளம் அதிபர் , ஆசிரியர் முரண்பாடு தொடர்பில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அறிக்கை கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.
- வலயக் கல்விப் பணிப்பாளர் , அதிபர் நியாமனம் தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது திரு.எஸ்.புஸ்பலிங்கம் அவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளார். நேர்முகத் தேர்வின் பின்னர் நியமனம் தொடர்பில் ஆராயப்படும்.
- யா/யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பாடசாலையில் மேல் மாடித்தளம் அமைப்பதற்கு 20 மில்லியன் ரூபா கோரியுள்ளதனால் மத்திய அரசிடம் கோருவது தொடர்பில் அமெரிக்க தூதரகத்திற்கும் மீள்குடியேற்ற அமைச்சிற்கும் எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டு 09 பாடசாலைகளிற்கும் 27 கழகங்களிற்கும் நிதி வழங்கியருந்ததாகவும் அந் நிதி உரியவர்களை சென்றடைந்தமை தொடர்பில் விளையாட்டு திணைக்கள பணிப்பாளரிற்கும் கலாச்சார திணைக்கள பணிப்பாளருக்கும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகவல் திரட்டி கௌரவ உறுப்பினர்களுக்கு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது.
- கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் கடிதம் மாணவர்களின் கைகளிறத் சென்று நூற்றுக்கணக்கான பிரதிகள் வெளியிடப்பட்டமை தொடாபில் உரிய பாதுகாப்பு முறை பேணப்படாமை தொடர்பில் வலயக் கல்விப் பணிபாளர் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.சு.பசுபதிப்பிள்ளை அவர்கள் கேட்டுக் கொண்டார். நிதிமோசடி தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளதனால் வலயக் கல்வி அலுவலகத்தில் சம்பந்தப்பட்டோர் ஈடுபட்டுள்ளமை தெரியவருவதாக கௌரவ உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் அவர்கள் தெரிவித்தார்.

  யா/இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பினை பலர் தவறாக விளங்கிக் கொண்டுள்ளதாக கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

  சிலர் பிழையான வழி நடத்தலில் இவ்வாறான நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்விடயம் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் உரிய பதிலை பெறுவதாகவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தர்.

  கிளி/கிளிநொச்சி மாகா வித்தியாலய அதிபர் நியமனம் தொடர்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சம்பந்தப்படாத தன்னுடைய பெயரும் சேர்க்கப்பட்டு வலையமைப்புகளில் வெளியிடப்பட்டதாக கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.வை.தவநாதன் அவர்கள் தெரிவித்தார்.

**வடமாகாண ஆசிரியர் சங்கம் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் பிழையான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக குற்றஞ்சாட்டுவதாக கௌரவ எதிக்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார். சென்ற கூட்ட அறிக்கை சரியென கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ எதிக்கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா அவர்கள் வழிமொழிந்தார்.**

**கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பிற்பகல் 01.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.**

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்.**

**இ. இரவீந்திரன்**
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்